விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, வைகாசி - 13 வியாழன் 27.05.2021 மலர் - 2, இதழ் - 51

# காங்கிரஸ் டூல்கிட் - வெளிவரும் உண்மைகள்

காங்கிரஸ் சமீபத்தில் வெளியிட்ட கருவித் தொகுப்பில் மத்திய அரசையும் பிரதமர் மோடியையும் விமர்சிக்கவும், காங்கிரசுக்கு ஆதரவான அலையை உருவாக்கவும் பல செயல் திட்டங்கள் வகுத்துத் தரப்பட்டன. இதில் தேசத்திற்கு இழுக்கு ஏற்படுத்தும் பல குறிப்புகளும்கூட இடம் பெற்றன. இதனை காங்கிரஸ் மறுத்துள்ளது. இந்த டூல்கிட்டை அம்பலப்படுத்திய பா.ஜ.க தலைவர்கள் கணக்கை முடக்க காங்கிரஸ் டுவிட்டரை கேட்டுக்கொண்டது. டுவிட்டரும் காங்கிரசுக்கு விஸ்வாசமாக செயல்பட்டது. இரு தினங்களுக்கு முன் டுவிட்டர் அலுவலகங்களில் டெல்லி காவல்துறை அதிரடி சோதனையும் முதற்கட்ட விசாரணையும் நடத்தியுள்ளது.

இந்நிலையில், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் ஆராய்ச்சித் துறையில் பணிபுரியும் சௌமியா வர்மா என்பவர்தான் காங்கிரஸ் கட்சியின் இந்த கருவித்தொகுப்பின் தொகுப்பாளராக செயல்பட்டுள்ளார் என்ற விவரம் தற்போது தெரியவந்துள்ளது. இந்த விவரங்கள் வெளியான உடன் அவர் தனது டுவிட்டர் கணக்கை அவர் உடனடியாக நீக்கிவிட்டார். எனினும் இது காங்கிரஸ் கட்சியினர் தயாரித்ததுதான் என்று உறுதிப்படுத்தும் ஆவணம் தற்போது சௌமியாவின் பதிவுகள் மூலமாக வெளியாகியுள்ளது.

இவரது இந்த டூல்கிட்டில் 'கொரோனா கால நெருக்கடியில், பொதுமக்கள் மத்தியில் எவ்வாறு பீதியை உருவாக்குவது, மருத்துவமனை படுக்கைகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகளை எவ்வாறு பதுக்கி வைப்பது, காங்கிரஸ் கட்சிக்கு நல்லெண்ணத்தை உருவாக்க அதனை எப்படியெல்லாம் பயன்படுத்துவது' என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. காங்கிரஸின் இந்த செயல், மக்கள் இறந்தாலும் பரவாயில்லை, மத்திய அரசுக்கு கெட்ட பெயர் ஏற்பட்டாலும் பரவாயில்லை, நமது தேசத்திற்கு உலக நாடுகளிடம் அவமானம் ஏற்பட்டாலும் பரவாயில்லை. தாங்கள் அதனால் அரசியல் லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற காங்கிரசின் தீய எண்ணத்தை வெளிப்படுத்துவதாகவே இந்த டூல்கிட் அமைந்துள்ளது என்பதையே எடுத்துக்காட்டுகிறது.

ராகுல் காந்தியின் சமூக ஊடகக் குழுவில் பணிபுரியும் சமூக ஊடக ஆர்வலர் சஞ்சுக்தா பாசு, கடந்த வியாழக்கிழமை இந்த கருவித்தொகுப்பை ஆதரித்து, "ஆம், அதனால் என்ன? எதிராளியின் பிம்பத்தை அழிக்க பிரச்சாரங்களை நடத்துவது ஒரு அரசியல் கட்சியின் பிறப்புரிமை. இறுதியாக காங்கிரஸ் கட்சி ஒரு நல்ல காரியத்தை செய்துள்ளது. இதற்கு மோடி ஏன் அழுகிறார்? அவர்கள் எப்போதும் மக்கள் தொடர்பு மற்றும் பிரச்சாரத்தில் சரியாக ஈடுபட்டதில்லை" என கருத்து தெரிவித்ததும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.



# பொருளாதார வளர்ச்சியில் நம்பிக்கை

பாரதத்தில் கொரோனா பாதிப்பு கடந்த 2020 தொடக்கத்தில் அதிகமாக இருந்ததால் நாடு தழுவிய ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது. இதனால் உற்பத்தி, ஏற்றுமதி, இறக்குமதி உள்ளிட்ட பொருளாதார நடவடிக்கைகள் அனைத்தும் முடங்கின. பொருளாதாரமும் வீழ்ச்சியைச் சந்தித்தது. மெல்ல இயல்பு நிலைத் திரும்பியதால் மீண்டும் வேகமெடுத்த நமது பாரதப் பொருளாதாரம் தற்போது கொரோனாவின் 2வது அலையால் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்கான மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளதால் இயல்பு நிலை மெல்ல திரும்பி வருகிறது. இதனால் நமது பாரதப் பொருளாதாரமும் வளர்ச்சிப் பாதைக்குப் பயணிக்கத் தொடங்கியுள்ளது. 2020 21 நிதியாண்டின் அக்டோபர் டிசம்பர் காலாண்டில் நமது பொருளாதாரம் 0.4 சதவீதம் வளர்ச்சி கண்டு நம்பிக்கையை ஏற்படுத்தியது. இந்நிலையில், சென்ற ஜனவரி மார்ச் காலாண்டில் இந்தியப் பொருளாதாரம் 1.3 சதவீதம் வளர்ச்சியைச் சந்திக்கும் என்று எஸ்.பி.ஐ ரிசர்ச் ஆய்வறிக்கை கூறியுள்ளது. எனினும், 202021 முழு நிதியாண்டில் இந்தியப் பொருளாதாரம் 7.3 சதவீதம் வீழ்ச்சியைச் சந்திக்கும் என்று இந்த ஆய்வில் எச்சரிக்கப்பட்டுள்ளது. 202021 நிதியாண்டில் பாரதப் பொருளாதார வளர்ச்சி குறித்த மதிப்பீட்டை வரும் மே 31ல் 'தேசிய புள்ளியியல் அலுவலகம்' வெளியிடவுள்ளது. அதற்கு முன்பாகவே எஸ்.பி.ஐ ரிசர்ச் தனது ஆய்வறிக்கையை வெளியிட்டு நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச அளவில் இதுவரையில் பொருளாதார வளர்ச்சி குறித்த அறிக்கைகளை வெளியிட்டுள்ள 25 நாடுகளில் பாரதம் ஐந்தாவது மிக வேகமாக வளரும் நாடாக இருப்பதாகவும் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.








# ஏ.பி.வி.பி. கோரிக்கை

பன்னிரெண்டாம் வகுப்பு தேர்வுகள் குறித்து முடிவெடுக்கும் போது, மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் எதிர்காலத்தை மனதில் வைத்து மத்திய மாநில அரசுகள் முடிவெடுக்க வேண்டும் என்று அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் (ஏ.பி.வி.பி) என்ற மாணவர் அமைப்பு கோரிக்கை வைத்துள்ளது. ஏ.பி.வி.பியின் தேசிய பொதுச் செயலாளர் நிதி திரிபாதி கூறுகையில், 'பல்வேறு இளங்கலை பாடதிட்டங்களில் மாணவர்கள் சேர்க்கை 12ம் வகுப்பு மதிப்பெண்கள் மற்றும் தகுதி பட்டியலை அடிப்படையாகக் கொண்டது என்பதால் மாணவர்களின் 12ம் வகுப்பு மதிப்பெண்கள் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. அதே சமயம், மாணவர்களின் பாதுகாப்பு, சுகாதாரம், கல்வி வாய்ப்புகளையும் அரசுகள் கவனத்தில் கொள்வது அவசியம்.' என தெரிவித்தார். மேலும் அந்த அமைப்பு, 'தேர்வை நடத்த வேண்டும் என்பதற்காக எந்தவொரு முடிவையும் அவசரமாக எடுக்க வேண்டாம். தற்போது நிலவும் கொரோனா சூழ்நிலைக்கு ஏற்ப, குறுகிய கால தேர்வு, திறந்த புத்தகத் தேர்வுகள், முக்கிய பாடங்களுக்கான தேர்வுகளை ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் சமூக இடைவெளியோடு நடத்துது, பல்கலைக்கழக மாணவர்களைப் பொறுத்தவரை, குறைக்கப்பட்ட பாடத்திட்டத்தின் அடிப்படையில் தேர்வுகளைஅரசுகள் பரிசீலிக்க வேண்டும், அதிக மாணவர்களுக்கு மிகக் குறைந்த நேரத்தில் தடுப்பூசி போடுவதற்காக பள்ளி கல்லூரி வளாகங்களில் தடுப்பூசி மையங்களை அமைக்கலாம்' என தேர்வுகள் குறித்து பரிசீலிக்க சில மாற்று வழிமுறைகளையும் பரிந்துரைத்துள்ளது.

# பாபா ராம்தேவ் மீது ஐ.எம்.ஏ. வழக்கு



நவீன அலோபதி மருத்துவத்தின் செயல்திறன் குறித்து பதஞ்சலி நிறுவனர் யோகா குரு பாபா ராம்தேவ் கூறிய சர்ச்சைக்குரிய கருத்துக்களைத் தொடர்ந்து, ஐ.எம்.ஏ அவருக்கு நோட்டீஸ் அனுப்பியுள்ளது. அதில், அவர் அடுத்த 15 நாட்களுக்குள் மன்னிப்பு கோரி வீடியோவை வெளியிட வேண்டும், எழுத்துப்பூர்வ மன்னிப்பு கோர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தவறும் பட்சத்தில் அவரிடம் ரூ. 1,000 கோடி நஷ்டஈடு கேட்டு அவதூறு வழக்குத் தொடரப்படும் என கூறப்பட்டுள்ளது. மேலும், யோகா குரு பாபா ராம்தேவ் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உத்தரகண்ட் முதல்வர் தீரத் சிங் ராவத்துக்கு ஐ.எம்.ஏவின் உத்தரகண்ட் பிரிவு கடிதம் எழுதியுள்ளது. முன்னதாக, பாபா ராம்தேவ் தனது வார்த்தைக்கு மன்னிப்பு கோரியதுடன் வார்த்தைகளை திரும்பப் பெறுவதாக அறிவித்திருந்தார். ஆனால் அதன் பின்னரும் இவ்வழக்கு தொடர்பான மிரட்டல் தொனியிலான அறிவிப்பு அவருக்கு விடுக்கப்பட்டுள்ளது என்பதும், அவர் கேட்ட 25 கேள்விகளுக்கு ஐ.எம்.ஏ உரிய பதிலை முறையாக அளிக்காமல், கேள்விகள் வெளியான மறுநாளே இந்த நோட்டீஸை அனுப்பியுள்ளது என்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது.


# கொரோனாவால் இறந்தவர்களால் தொற்று பரவாது

டில்லி எய்ம்ஸ் மருத்துவமனையின் தடயவியல் துறையின் தலைவர் மருத்துவர் சுதிர் குப்தா, 'கொரோனாவால் உயிரிழந்த, 100க்கும் மேற்பட்ட உடல்கள் மீது, 12 முதல், 24 மணி நேர இடைவெளியில் பரிசோதனைகள் நடத்தப்பட்டதில், தொற்று இல்லை என்றே முடிவுகள் வந்துள்ளன. உயிரிழந்தவர்களின் மூக்கு, வாய்ப் பகுதிகளில் 24 மணி நேரத்திற்கு பின் கொரோனா வைரஸ்கள் செயலிழந்து விடுகின்றன. எனவே, அந்த உடல்களில் இருந்து தொற்று பரவும் அபாயம் மிகவும் குறைவு. எனினும் பாதுகாப்பு காரணங்களுக்காக அந்த உடல்களின் மூக்கு, வாய்ப் பகுதிகளை நன்றாக அடைத்துவிடவேண்டும். கொரோனாவால் இறந்தவர்களின் உடல்கள் எரிக்கப்பட்ட பின், எலும்புகள், சாம்பல் வாயிலாக தொற்று பரவாது. அவற்றை சேகரிப்பவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது' என்று கூறியுள்ளார். கொரோனாவால் உயிரிழந்தவர்களின் இறுதி



சடங்குகள் கண்ணியமான முறையில் நடத்தப்பட வேண்டும் என்ற மக்களின் எதிர்பார்ப்புக்கு மருத்துவர் சுதிர் குப்தாவின் கருத்து வலு சேர்த்துள்ளது.


# பி.பி.சியின் சார்பு நிலை




பி.பி.சி தொலைக்காட்சி, சமீபத்தில் புதிய நாடாளுமன்றம் மற்றும் அதனை சார்ந்த அலுவலகங்கள் குடியிருப்புகள் உள்ளிட்ட திட்டங்கள் குறித்த ஒரு செய்தித் தொகுப்பை வெளியிட்டிருந்தது. அந்த செய்தித் தொகுப்பு முழுவதும் பாரதப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஒரு புதிய வீடு தேவையா? என்ற ரீதியிலேயே பி.பி.சியால் திட்டமிட்டு நடத்தப்பட்டது. இதில் திட்டத்தை விமர்சித்த ராகுல் காந்தி, கட்டிடக் கலைஞர் கௌதம் பாட்டியா, அரசியல் ஆய்வாளர் மோகன் குருசாமி ஆகியோரின் பேச்சுகள் மேற்கோள் காட்டப்பட்டன. பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு கட்டப்படும் அந்த வீடு பிரதமருக்கானதே தவிர மோடிக்கானது அல்ல என்பதை மறைத்து, மோடியின் தற்போது கட்டும் தங்குமிடம் மிகவும் ஆடம்பரமானது என கூறப்பட்டது. இந்த செய்தித் தொகுப்பு காங்கிரசின் டூல்கிட்டை ஒத்து இருப்பதும் கவனத்தில் கொள்ளத்தக்கது. புதிய நாடாளுமன்ற கட்டிடம் மற்றும் புதிய அலுவலக வளாகங்கள் ஏன் தேவை என்று ஒரு முறை கூட அந்த செய்தித் தொகுப்பில் ஆராயப்படவில்லை. முன்னதாக சில நாட்களுக்கு முன் பி.பி.சி, கங்கையில் சில உடல்கள் மிதந்து வந்ததைப் பற்றி வெளியிட்ட செய்தியில், பாரதத்தையும், ஹிந்துக்களின் பழக்கவழக்கங்களையும் கொச்சைப்படுத்தும் விதத்தில் 'பாரதத்தின் புனிதமான நதி உடல்களால் வீங்கியுள்ளது' என்ற தலைப்பில் தயாரிக்கப்பட்டிருந்தது. இவை அனைத்தும், பி.பி.சி செய்தி நிறுவனத்தின் சார்புத் தன்மையை வெளிச்சம்போட்டு காட்டுவதாகவே அமைந்துள்ளன.

---

# டாடாவின் உயர்ந்த உள்ளம்



கொரோனா தொடர்பான அகால மரணங்கள் அவர்களது குடும்பங்களை உணர்ச்சி ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் வெகுவாக பாதிக்கிறது. குறிப்பாக குடும்பத்தின் ஒரே சம்பாதிக்கும் உறுப்பினர் இறந்துவிட்டால் அது மோசமானதொரு சூழல்தான் என்பது மறுப்பதற்கில்லை. கொரோனாவால் இறந்த ஊழியர்களின் குடும்பங்களுக்கு உதவ போரோசில் மற்றும் ஓ.ஒய்.ஒ உள்ளிட்ட சில கார்ப்பரேட் நிறுவனங்கள் முன்வந்துள்ளன. இந்நிலையில், பாரதத்தின் புகழ் பெற்ற மிகப்பெரிய கார்ப்பரேட் நிறுவனங்களில் ஒன்றான டாடா ஸ்டீல், கொரோனா நோய்த்தொற்று காரணமாக இறந்த ஊழியர்களின் குடும்பங்களுக்கு, “உங்களுடன், நேற்று, இன்று மற்றும் நாளைக்கான ஒரு வாக்குறுதி” என்ற திட்டத்தின் கீழ், இறந்தவரின் 60 வயது வரை தொடர்ந்து சம்பளம், மருத்துவ சலுகைகள், வீட்டு வசதிகளுடன் அவரது குடும்பத்தினருக்கு தொடர்ந்து வழங்கப்படும். அவர்களது குழந்தைகளின் கல்விச் செலவுகளை அவர்கள் பட்டம் பெறும் வரை ஏற்கப்படும் என்றும் அறிவித்துள்ளது. டாடா நிறுவனம், நமது நட்டிற்கு எந்த ஒரு இடர்பாடு வந்தாலும் முதலில் ஓடி வந்து உதவும் ஒரு நிறுவனம் என்பது பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்டுள்ளது. கடந்த கொரோனா முதல் அலை, தற்போதைய 2வது அலையின் போதும் ரூ. 500 கோடிக்கும் அதிகமான உதவிகள், 30,000 டன் மருத்துவ ஆக்ஸிஜன் வழங்கல், ஆக்ஸிஜன் போக்குவரத்துக்கு உதவ 14 கிரையோஜெனிக் கொள்கலன்கள் இறக்குமதி என பல்வேறு உதவிகளை டாடா நிறுவனம் தொடர்ந்து செய்து வருகிறது.

# வீணாக்கப்படும் தடுப்பூசிகள்




தடுப்பூசிகளை வீணாக்குவதை ஒரு சதவீதத்திற்கும் குறைவாக குறைக்க சுகாதார அமைச்சகம் போதிய ஆலோசனைகள் தொடர்ந்து அளித்து வரும் போதிலும், பல மாநிலங்கள் தடுப்பூசிகளை முறையாக திட்டமிட்டு பயன்படுத்தாமல் வீணடிக்கின்றன. தடுப்பூசியை வீணடிக்கும் மாநிலங்களின் வரிசையில், காங்கிரஸ் கூட்டணி ஆட்சி செய்யும் ஜார்கண்ட் சத்தீஸ்கர் மாநிலம் 37.3 சதவீதமும், காங்கிரஸ் ஆட்சி செய்யும் சத்தீஸ்கர் 30.2 சதவீதமும் தி.மு.க காங்கிரஸ் கூட்டணியினர் ஆட்சி செய்யும் தமிழகம் 15.5 சதவீதத்துடனும் முதல் மூன்று இடங்களில் உள்ளன என்பது வேதனையான தகவல். இது தேசிய சராசரியான 6.3 சதவீதத்தைவிட மிகவும் அதிகம். இரண்டு வாரங்களுக்கு முன்பு ஹரியானா அரசு, தடுப்பூசிகள் வீணாவதில் கோவிஷீல்ட் 6 சதவீதம், கோவாக்சின் 10 சதவீதத்துடன் இருந்தது. ஆனால் அது தற்போது முறையே 3.1% மற்றும் 2.4% ஆக குறைந்துள்ளது. அனைத்து தடுப்பூசி திட்டங்களிலும் தடுப்பூசி வீணடிப்பது தவிர்க்க முடியாததுதான். இருப்பினும், வீணாவதைக் குறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும், சரியான திட்டமிடல், ஒழுங்குமுறை தேவை. இது குறித்து அரசுக்கும், அதிகாரிகளுக்கும், மக்களுக்கும், மருத்துவ பணியாளர்களுக்கும் போதிய விழிப்புணர்வு இருப்பதும் அவசியம் என வலியுறுத்தப்படுகிறது.

# நீதிமன்றம் சென்றது வாட்ஸ்அப்



டுவிட்டர், முகநூல், வாட்ஸ்ஆப் போன்ற சமூக ஊடக நிறுவனங்கள் தங்களது பயனாளர்களின் புகார்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க தலைமை நடவடிக்கை அதிகாரி, சிறப்பு பணி தொடர்பு அதிகாரி, உள்ளுறை குறைதீர் அதிகாரி ஆகியோரை நியமிக்க வேண்டும் என்பது போன்ற பல புதிய விதிகளை மத்திய அரசு கடந்த பிப்ரவரியில் வெளியிட்டது. இந்த விதிகளுக்கு இணங்கிச் செயல்படவும், இதனை செயல்படுத்த கட்டமைப்புகலை உருவாக்கவும் சமூக ஊடகங்களுக்கு மூன்று மாத அவகாசம் அளிக்கப்பட்டது. விதிகளுக்கு இணங்காத நிறுவனங்களுக்கு எதிராக தடை உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் அந்த அவகாசம் மே 25 உடன் நிறைவடைந்தது. டுவிட்டர் உள்ளிட்ட சமூக வலைதளங்கள் மத்திய அரசின் புதிய சட்ட விதிகளை ஏற்றுக் கொண்டதாக செய்திகள் வெளியாகியுள்ளன. ஆனால், மத்திய அரசின் புதிய சட்ட விதிகளுக்கு எதிராக, 'புதிய விதிகள் தனியுரிமை தகவல் பாதுகாப்பை நீர்க்கச் செய்யும், இது அரசியல் சாசன சட்டத்திற்கு எதிரானது' என்ற கோணத்தில் வாட்ஸ்ஆப் நிர்வாகம் டில்லி உயர் நீதிமன்றத்தில் முறையீடு செய்து உள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

# சி.பி.ஐக்கு உச்ச நீதிமன்றம் அனுமதி



நாரதா ஸ்டிங் வழக்கில் சி.பி.ஐயால் கைது செய்யப்பட்ட திருணமுல் கட்சித் தலைவர்களான ஃபிர்ஹாத் ஹக்கீம், சுப்ரதா முகர்ஜி, மதன் மித்ரா மற்றும் தேர்தலுக்கு முன்னதாக திருணமுல் கட்சியை விட்டு வெளியேறி பா.ஜ.கவில் இணைந்த சோவன் சாட்டர்ஜி ஆகியோரை விடுவிக்க, மமதா பானர்ஜி, சி.பி.ஐ அலுவலகத்தில் ஆறு மணி நேரம் தர்ணாவில் அமர்ந்து நாடகம் நடத்தினார். தன்னுடைய கட்சியின் குண்டர்கள் அடங்கிய ஒரு கும்பல் சி.பி.ஐ அலுவலகத்தை முற்றுகையிட்டு வன்முறையில் ஈடுபட்டதை அவர் தடுக்கவில்லை. மேலும், சி.பி.ஐ குறித்து அவதூறான கருத்துக்களையும் பரப்பினார். இது குறித்து சி.பி.ஐ உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடுத்தது. இதனை விசாரித்த உச்ச நீதிமன்றம், 'நீங்கள் விரும்பினால் மேற்கு வங்க முதல்வர் மமதா பானர்ஜி, மாநில சட்ட அமைச்சர் மோலோய் கட்டக் ஆகியோருக்கு எதிராக வழக்கு தொடரலாம்.' என கூறியுள்ளது.

# பாகிஸ்தானுக்கு ராணுவ நிதியுதவி நிறுத்தம்

பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கைக்கு உதவும் வகையில் பல நாடுகளுக்கு, அமெரிக்கா ராணுவ நிதியுதவி அளித்து வருகிறது. பல ஆண்டுகளாக இந்த நிதியுதவியை பாகிஸ்தானும் பெற்று வந்தது. ஆனால், பயங்கரவாதிகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் பாகிஸ்தான் அரசு எடுக்கவில்லை. எல்லைத் தாண்டிய பயங்கரவாதத்தை ஊக்குவித்து வருகிறது. உலகில் உள்ள அனைத்து பயங்கரவாதிகளின் சொர்க்கபுரியாக பாகிஸ்தான் உள்ளது என அனைத்து நாடுகளும் புகார் தெரிவிக்கின்றன. இதனால், கடந்த 2018 முதல், பாகிஸ்தானுக்கு வழங்கப்படும் ராணுவ நிதியுதவியை, அன்றைய அமெரிக்க அதிபர் டிரம்ப் நிறுத்தி வைத்தார். இந்த ஆண்டு அமெரிக்காவில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஜோ பிடன் அதிபரானார். இதனால், 'ராணுவ நிதியுதவியை அமெரிக்கா அளிக்கும்' என பாகிஸ்தான் எதிர்பார்த்தது. ஆனால், பாகிஸ்தானுக்கு ராணுவ நிதியுதவி நிறுத்தத்தை தொடர அதிபர் ஜோ பிடன் தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. இதனை அமெரிக்க ராணுவ தலைமையகமான, 'பென்டகனின்' செய்தி தொடர்பாளர் ஜான் கிர்பி உறுதி செய்துள்ளார்.



## பதவியேற்க முடியாத முதல் பெண் பிரதமர்



நியூசிலாந்துக்கும் ஹவாய் தீவுகளுக்கும் இடையில் அமைந்துள்ள சுமார் 2 லட்சம் மக்கள்தொகை கொண்ட இரண்டு தீவுகளைக் கொண்ட சிறிய நாடு சமோவா. இங்கு கடந்த 1998 முதல் பிரதமராக இருக்கும் துய்லீபா அயோனோ சைலே மாலிலேகாவோனி, ஏப்ரல் 9ல் நடைபெற்ற தேர்தலில் ஒரு தொகுதி வித்தியாசத்தில் தோல்வியடைந்தார். ஆனால் அவர் தன் பதவையை ராஜினாமா செய்ய மறுத்துவிட்டார். அந்த நாட்டு நாடாளுமன்றத்திற்கு நடைபெற்ற தேர்தலில் மொத்தமுள்ள 51 இடங்களில், ஃபியாம் நவோமி மாதாஃபா என்ற பெண் கடந்த ஆண்டு புதியதாக ஃபாஸ்ட் என்ற கட்சி 26 இடங்களை கைப்பற்றி ஆட்சியை கைப்பற்றியது. ஆனால் மாலிலேகாவோனியின் மனித உரிமைகள் பாதுகாப்புக் கட்சி (HRPP) தாங்கள்தான் 26 இடங்களை வென்றதாகக் கூறிவருகிறது. இதனால் வெற்றி பெற்றும் ஆட்சியமைக்க முடியாமல் முதல் பெண் பிரதமரான மாதாஃபா தவித்து வருகிறார். சமோவாவின் அரசியலமைப்பின் படி, புதிய பிரதமர் 45 நாட்களுக்குள் பதவியேற்க வேண்டும். ஆனால், மாதாஃபா கடந்த திங்களன்று மாலிலேகாவோனி கட்சியினரால் நாடாளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார். அவர் நாடாளுமன்றத்திற்குள் சத்தியப்பிரமாணம் செய்ய அனுமதிக்கப்படவில்லை. இதனால், நாடாளுமன்ற கட்டிடத்திற்கு வெளியே அமைக்கப்பட்ட தற்காலிக கூடாரத்தில் மாதாஃபா சத்தியப்பிரமாணம் எடுத்துக்கொண்டார். நியூசிலாந்து மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய இரு நாடுகளும் புதிய பெண் பிரதமர் மாதாஃபாவை ஆதரிப்பதுடன் நாட்டின் சட்ட திட்டங்களை பின்பற்றுமாறு மாலீலகோவோனியிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

## சீனாவுக்கு பணிந்ததா உலக சுகாதார அமைப்பு ?

சீனாவின் முயற்சியால் உலக சுகாதார மாநாட்டில் (WHA) தைவானை கலந்துகொள்ள உலக சுகாதார அமைப்பு (WHO) அனுமதிக்கவில்லை என்ற பரபரப்புக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. கடந்த 2008ம் ஆண்டில், உலக சுகாதார அமைப்பில் தைவானுக்கு பார்வையாளர் அந்தஸ்து வழங்கப்பட்டது. ஆனால் சீனாவின் தீவிரமான அரசியல் சூழ்ச்சிகளால், 2016ல் தைவான் அதில் இருந்து நீக்கப்பட்டது. முன்னதாக கொரோனா தொற்றுநோயை வெற்றிகரமாகக் கையாண்டதற்காக தைவான் உலகளவில் பாராட்டப்பட்டது. எனினும் தற்போதைய உலகலாவிய கொரோனா தாக்கம் அதிகரித்துள்ள சூழலில், உலக சுகாதார மாநாட்டில் தைவான் இடம் பெறாதது பல நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. தைவான் தன்னை சீனாவின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொண்ட பின்னரே தைவானை பங்கேற்க அனுமதிக்க உள்ளதாக சீனா கூறி வருகிறது. ஆனால், தைவான் 'ஒரு சீனம்' என்ற கொள்கையை ஏற்கவில்லை. தனது இறையாண்மையை காக்க தொடர்ந்து போராடி வருகிறது. முன்னதாக கொரோனா தொற்றுநோயை மோசமாகக் கையாண்டதற்காகவும், தொற்றுநோய் பற்றிய தகவல்களை மூடி மறைக்க சீனாவுக்கு உதவியதாகவும் உலக சுகாதார அமைப்பும் அதன் இயக்குநர் ஜெனரல் டாக்டர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸசும் விமர்சிக்கப்பட்டனர் என்பது நினைவில் கொள்ளத்தக்கது. இந்நிலையில், "உலக சுகாதார அமைப்பு, அனைத்து மனித இனத்தின் ஆரோக்கியத்திற்கும் நலனுக்கும் சேவை செய்ய வேண்டும். ஆனால் ஒரு குறிப்பிட்ட உறுப்பினரின் அரசியல் நலன்களுக்கு அடிபணியக்கூடாது." என தைவானின் சுகாதார அமைச்சர் சென் ஷிஹ் சுங் தெரிவித்துள்ளதாக ராய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

# தெரசாவின் மறுபக்கம் - வெளிவந்த உண்மைகள்

மதம் மாற்றுவது ஒன்றையே தனது குறிக்கோளாகக் கொண்டு பாரதம் வந்தவர் தெரசா. 'அன்னை தெரசா' என அழைக்கப்படுவதற்கு அவர் தகுதி இல்லாதவர் என பல ஆண்டுகளாக, பலரால் தெரசா குற்றம் சாட்டப்பட்டுள்ளார். அவரது பழமையான பழக்கவழக்கங்கள், அவரது சிக்கலான வரலாற்று பின்னணி, பலவீனமனவர்கள், ஆதரவில்லாதவர்கள், பாதிக்கப்பட்டவர்களை வலுக்கட்டாயமாக மதம் மாற்றுவது, அனாதை குழந்தைகளை அவர் சார்ந்த கிறிஸ்தவ மதப்பிரிவினருக்கு மட்டுமே தத்துக் கொடுப்பது என அவர் குறித்த பல்வேறு விமர்சனங்களும் அவர் இருந்தபோதே வைக்கப்பட்டன. மதமாற்றத்தை மேற்கொள்ள வசதியாக பல பத்திரிகைகள், தொலைகாட்சிகள், அறிவு ஜீவிகள், அரசியல்வாதிகள், சில கிறிஸ்தவ நாடுகள் என அனைவரும் சேர்ந்து தெரசாவை மனிதரில் ஒரு புனிதராக காட்டி ஒரு போலி பிம்பத்தை கட்டமைத்தன என்ற கூற்றும் பலரால் பல காலமாக முன்வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

### தி டர்னிங்:

இந்த சூழலில், தெரசாவின் கடுமையான விமர்சகர்களில் ஒருவராக இருந்த பிரபல ஆங்கில அமெரிக்க சமூக அரசியல் விமர்சகர் மற்றும் பொது அறிவு ஜீவியான கிறிஸ்டோபர் ஹிச்சன்ஸ், பல ஆண்டுகளுக்கு முன்பு கூறிய கூற்றை ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு "தி டர்னிங்: தி சிஸ்டர்ஸ் ஹூ லெஃப்ட்" என்ற புதிய போட்காஸ்ட் வெளியிடப்பட்டது. அதில், தெரசாவின் சேவைக்கு தங்களை சமர்ப்பித்த பெண்களும் மற்றும் தங்கள் முழு வாழ்க்கையையும் அவரது மிஷனரிஸ் ஆஃப் சேரிட்டிக்கு அர்ப்பணித்த மேரி ஜான்சன், கோலெட் லிவர்மோர், கெல்லி டன்ஹாம் உல்ளிட்ட பல பெண்களும் அந்த மூடிய கத்தோலிக்க சபைக்கு பின்னால் நடந்த பல அதிர்ச்சிகரமான உண்மைகளையும் தங்கள் மனகுமுறல்களையும் வெளியிட்டுள்ளனர்.

### வாக்குமூலம்:

கன்னியஸ்திரிகளுக்கு ராணுவப் பயிற்சி அளிப்பது, கட்டாய தனிமைப்படுத்துதல், சுயமாக 'கசையடி' கொடுத்துக்கொள்வது, குளிக்க அனுமதிக்காதது, கூர்மையான முட்கள் பதித்த உடைகளை அணியுமாறு கட்டாயப்படுத்துவது உள்ளிட்ட பல மோசமான பழக்கவழக்கங்களையும் பல ரகசிய சடங்குகளையும் கொண்ட ஒரு வழிபாட்டு அமைப்பாக மிஷனரிஸ் ஆஃப் சேரிட்டி நடந்துகொண்டது. கன்னியாஸ்திரிகள் மிக மிக அவசரகால சூழ்நிலைகளைத் தவிர, அவர்களது குடும்ப உறுப்பினர்களிடம் தொலைபேசிகளில் பேசக்கூட தடை விதிக்கப்பட்டிருந்தது. அவர்கள் வீட்டிற்குச் செல்ல சுதந்திரமில்லை. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே தங்கள் வீட்டிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். ஒரு சகோதரி ஒரு சகோதரியுடன் இன்னொரு சகோதரியுடன் நெருக்கமாக பேச, பழகத் தடை, ஒருவருக்கொருவர் தொடுவதற்கான தடை என பல தடைகள் விதிக்கப்பட்டிருந்தன' என பல கன்னியாஸ்திரிகள் இந்த போட்காஸ்ட்டில் வாக்குமூலம் அளித்துள்ளனர்.

**ஊடக சாட்சியங்கள்:**

தெரசாவை விமர்சித்ததால் பல ஆண்டுகள் உயிருக்கு அஞ்சி பயத்துடனேயே வாழ்ந்த டாக்டர் அரூப் சாட்டர்ஜி, இறுதியாக 'தி நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகையில் தெரசாவின் மிஷனரிகளால் நடத்தப்படும் மருத்துவமனைகளின் அருவருப்பான யதார்த்தத்தைப் பற்றி மனம் திறந்தார். மிஷனரி மருத்துவமனைகளில் படுக்கையில் கட்டப்பட்டதால் குழந்தைகள் வேதனையுடன் அலறுவதை நான் கண்டேன். வலியைக் குறைக்க ஆஸ்பிரின் தவிர வேறு எந்த நிவாரணமும் வழங்கப்படாததால் இறக்கும் நோயாளிகள் துயரத்தில் அழுவதையும் கண்டேன். இவை அனைத்தும் அவர்களது 'துன்ப வழிபாட்டின்' ஒர் பகுதியாகவே இருந்தது என சாட்டர்ஜி அதில் குறிப்பிட்டுள்ளார். இதைத்தவிர, கிறிஸ்டோபர் ஹிச்சன்ஸ் மற்றும் பத்திரிகையாளர் தாரிக் அலி தயாரித்துள்ள ‘ஹெல்ஸ் ஏஞ்சல்ஸ்’ என்ற ஆவணப்படத்தில் தெரசாவின் மத அமைப்புகளின் அருவருப்பான எதார்த்தத்தை பொது வெளியில் கொண்டு வந்தது. வாஷிங்டன் போஸ்ட் வெளியிட்ட ஒரு அறிக்கையில், 'தெரசாவின் மிஷனரிகளால் நடத்தப்படும் மருத்துவமனைகளில் இறந்து கொண்டிருக்கும் நோயாளிகள், இறப்பதற்கு முன் கட்டாயப்படுத்தி கிறிஸ்தவ மதத்திற்கு மாற்றப்பட்டார்கள்' என்ற உண்மை வெளியானது.



## உழைப்புதான் அதிர்ஷ்டம் தரும்

ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை குறித்து கவலை கொண்டார். ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்து தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார். அது மட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தனர். முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினர். புதையல் எதுவும் கிடைக்கவில்லை.



ஒருவேளை, அப்பா "இரண்டடி" என்று சொல்வதற்கு பதிலாக "ஓரடி" என்று சொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல்கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலம் முழுவதையும் இரண்டடி தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது. இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும் என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே மிஞ்சியது. அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் 'சரி, தோண்டியது வீணாக வேண்டாம்' என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள். உரம் போட்டார்கள். உழைப்பு வீணாகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை லாபம்.

பின்னர், இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.


விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

93613 99006